மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) போதும். மற்றவையெல்லாம் ஆய்வில் இருக்கின்றன. நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

6. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள். (குறுக்கீடுகள்) நாளை எடுத்துக்கொள்ளலாம்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்தேழு முதல் நூற்று நாற்பது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

7. வரவு–செலவுத் திட்டம், 2009–2010, பொது விவாதம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009–2010 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் தொடர்ச்சி. (குறுக்கீடுகள்) இன்றைய தினம் (குறுக்கீடுகள்) திரு. கே. மகேந்திரன், நான் hearing aid வைத்துக்கொள்ளவில்லை. எனக்கு நன்றாகக் கேட்கிறது. அமைதியாக உட்காருங்கள். 2009–2010 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். இன்று 10 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், அ.இ.அ.தி.மு.க. சார்பாகப் பேசுவார். ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த subject–க்குப் போயாகிவிட்டது. இனி எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) எதையும் எடுக்கமாட்டேன். No. (குறுக்கீடுகள்) திரு. ஆ. அருண்மொழிதேவன், பேசுங்கள்.